1968 மார்ச் 6]

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, எங்களுடைய கட்சிக் கொறடா மாண்புமிகு விநயகம் அவர்கள் மீதான பிரச்சினையின்மீது எத்தனை நாட்களுக்குள் தங்கள் கருத்தைத் தெரிவிப்பீர்கள் என்று தெரிந்து கொள்ளமுடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எத்தனை நாட்களுக்குள் என்று சொல்ல முடியாது. கூடிய விரைவில் குறிப்பிடுகிறேன். திருத்தப்பட்ட பிரதிகளைப் படித்துப் பார்த்தபிறகுதான் இதைப் பற்றிக் கூற முடியும். அதற்கு வாக்குறுதி சொல்ல விருப்பமில்லை.

4. கவன ஈர்ப்பு.

மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் விளைச்சலின்மையும், வரி தள்ளுபடியும், கடன் வசூல் ஒத்தி வைப்பும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 41-வது விதியின் கீழ் திரு. இராசாங்கம் அவர்கள் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. மா. இராசாங்கம் : சட்டப் பேரவைத் தலைவரவர்களே, 41-வது விதியின்கீழ் அவசரமும், பொது முக்கியமுமான காரியம் ஒன்றைக் கொண்டு வருகிறேன்.

மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பெரியாறு–வைகை அணைகள் மூலம் பாசன வசதி பெறும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தண்ணீர் இல்லாது விளைச்சலின்றிச் சாவியாகிவிட்டபடியால் இந்நிலங்கள் மீதான வரிகளைத் தள்ளுபடி செய்யவும், கடன் வசூலை ஒத்திப்போடுவதும் பற்றிய காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் எனது பெயரில் கொடுக்கப்பட்டிருக்கிற அவசரமும் பொது முக்கியமுமான காரியம் ஒன்றினை மாண்புமிகு உணவு, வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பெரியாறு–வைகை அணைகள் மூலம் பாசன வசதிபெறும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தண்ணீர் இல்லாது விளைச்சலின்றிச் சாவியாகிவிட்டன. ஆகவே, இந்நிலங்கள் மீதான வரிகளைத் தள்ளுபடி செய்யவும், கடன் வசூலை ஒத்திப் போடுவதும் பற்றிய அவசரமும் பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தை மாண்புமிகு உணவு, வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பெரியாறு–வைகை அணைகள் மூலம் பாசன வசதிபெறும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தண்ணீர் இல்லாது விளைச்சலின்றிச் சாவியாகிவிட்டன என்றும், இந்நிலங்கள் மீதான வரிகளைத் தள்ளுபடி செய்யவும், கடன் வசூலை ஒத்திப் போடவும் வேண்டும் என்று நாட்ட ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரியகுளம், உத்தமபாளையம் வட்டங்களில் பெரியாறு பாய்ச்சலின்றிப் பாதிக்கப்பட்ட பகுதியில் பயிர்கள் வாடிப் போவதற்கோ அல்லது சாவி அறுவடைக்கோ இடமில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. திருமங்கலம், உசிலம்பட்டி வட்டங்களில் திருமங்கலம் முக்கியக் கால்வாயின் (வைகை நீர்) கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு ஆண்டுதோறும் ஜூன் திங்களிலிருந்து 3 திங்களுக்கு குறுவைப் பயிர் ஒன்றைப் பயிரிட வைகை

நீரைப் பெற உரிமை பெற்றதாகும். இந்தப் பசலியில் 1967-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ம் நாள் முதற்கொண்டு வைகை நீர் திறந்துவிடப்பட்டு சுமார் நான்கு திங்களுக்கு நீர் வழங்கப்பட்டது. எனவே, முதல் குறுவைப் பயிர் நன்முறையில் அறுவடை செய்யப்பட்டது. இந்த ஆயக்கட்டில் பயிரிடப் படும் சம்பாப் பயிரும், இரண்டாம் பயிரும் வைகை நீரைப் பெற இயலாது ; இந்தப் பயிர்களை கிணற்றுப் பாசனத்தை நம்பி உழவர்கள் பயிரிடுகிறார்கள். எனினும் இந்த வட்டங்களில் உள்ள ஆயக்கட்டில் எந்த இடத்திலும் பயிர் விளைச்சல் தவறிப் போகவில்லை. நிலக்கோட்டை வட்டத்தில், பெரியாறு ஆயக்கட்டில் உள்ள, 2,250 ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் பயிரிடப்பட்ட நெற்பயிர் பாதிக்கப்படலாமென்று தெரிகிறது. மேற்படி வட்டங்களில் பருவ மழை தவறியதால் பெரியாற்றுப் பகுதி அல்லாத இடங்களிலும், வைகைப் பகுதியல்லாத இடங்களிலும் இங்குமங்குமாகச் சில இடங்களில் பயிர் விளைச்சல் தவறிப்போயுள்ளது.

பெரியாறு பாய்ச்சலின்றிப் பாதிக்கப்பட்ட பெரும்பகுதிச் சாகுபடி நிலங்கள் உள்ள வடக்கு மதுரை வட்டத்தில், பெரியாறு பாசன ஏற்பாட்டின் கடைக் கோடியில் நெற்பயிர்கள் பயிரிடப்பட்ட சுமார் 8,000 ஏக்கர் பரப்பு பாதிக்கப்படலாமெனத் தெரிகிறது. பெரியாறு பாசன ஏற்பாட்டைச் சேர்ந்த ஆயக்கட்டின் கீழ் மேலூர் வட்டத்திலுள்ள நன்செய் நிலங்கள், ஒரு போக நன்செய் நிலமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன ; அவை, பெரியாறு பாசனத் திட்டத்தின் கடைக்கோடியில் அமைந்துள்ளன. 1967 நவம்பர் மாதத்திற்கு முன்னர் நடவு செய்யப்பட்ட நெற்பயிர் நல்ல விளைச்சலைத் தந்துள்ளது. (இந்த வட்டத்தில் பெரியாறு ஆயக்கட்டின் கீழ் உள்ள 45,625 ஏக்கரில்) சுமார் 12,147 ஏக்கர் நிலப் பரப்பில் காலம் தாழ்த்தி நடவு செய்யப்பட்ட நெற்பயிர்கள் இளம் பயிராகவோ கதிர் விடும் நிலையிலோ உள்ளது ; இப்பரப்பில் உள்ள இந்த இளம் நெற்பயிர் பாதிக்கப்படலாம். நான்கு கிராமங்களிலுள்ள வைகை நீர் பெறும் ஏரிகள் வறண்டுவிட்டன. இந்த ஏரிகளின் கீழுள்ள நெற்பயிர் பசுமையாகவும் கதிர் விடும் நிலையிலும் உள்ளது ; இப்பயிர் பாதிக்கப்படலாம். தெற்கு மதுரை வட்டத்தைப் பொறுத்த வரையில், பெரியாறு அல்லது வைகை அணைக்கட்டிலிருந்து நேரடிப்பாசனம் இல்லை. ஆனால், வைகை ஆற்றிலிருந்து நீர்பெறும் கிளை வாய்க்கால்கள் உள்ளன. வைகை நீர்பெறும் நீர்பாசன ஏரியின் கீழ் 100 ஏக்கர் பரப்பிற்கு மேல் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர் சாவியாகலாம். பிற வட்டங்களில் பெரியாறு-வைகைப் பாசனக் கிராமங்கள் இல்லை.

வரியை நிறுத்த வேண்டியும் கடன் வசூலிப்பை ஒத்திப் போட வேண்டியும் உள்ள நிலையில் எந்த குறிப்பிட்ட வட்டாரத்திலும் அல்லது பகுதியிலும் பொதுவாகப் பயிர் விளைச்சல் தவறவில்லை. இங்குமங்குமாகச் சில இடங்களில் பயிர் விளைச்சல் தவறியிருந்தால், அந்த இடங்களில் நிலவரி தள்ளுபடி செய்யப்படும். மும்முரமாக பயிர் மதிப்பீடு செய்யவும், அவசியமான இடங்களில் வருவாய் வாரிய நிலை ஆணை 13-ன் கீழ் நிலவரித் தள்ளுபடி செய்யவும், தள்ளுபடி செய்யத்தக்கதாயிருந்தால் நிலவரியை வசூலிக்காமலிருக்கவும் கோட்ட அதிகாரிகளுக்கும் தாசில்தார்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏற்கெனவே கட்டளைகள் பிறப்பித்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பெரியாறு-வைகைத் திட்டத்தின்கீழ் உள்ள நிலங்கள், சிவகெங்கை, திருப்பத்தூர் வட்டங்களில் அமைந்துள்ளது. இந்த நிலங்களிலுள்ள பயிர்களுக்கு இந்தப் பசலியில் முழு அளவில் போதுமான நீர் வழங்கப்படவில்லை. எனினும், சில பகுதிகளில் உள்ள பயிர்கள், கிணற்று நீர்ப் பாசனத்தால் விளைந்து விட்டன. இந்த ஆயக்கட்டுப் பகுதி முழுவதிலும் பயிர்கள் அறவே அழிந்துவிடவில்லை. இந்த மாவட்டத்தில் உள்ள பெரியாறு, வைகை ஆயக்கட்டுப் பகுதிகளுக்காக சிறப்பாக வரித் தள்ளுபடி அளிக்கும் அவசியம் எதுவும் எழவில்லை. நீரின்மையால் பயிர்கள் விளைச்சல் தவறும் இடங்களிலெல்லாம் வருவாய் வாரிய நிலை ஆணை 13-வது விதித்துறைக்கிணங்க இயல்பான வரித் தள்ளுபடி அளிக்கப்படும். எங்கணும் பரவியுள்ள பேரிடர் காரணமாகவோ, பருவ மழை

1968 மார்ச் 6] [திரு கே. அ. மதியழகன்]

பொய்த்ததன் காரணமாகவோ மேற் சொன்ன பகுதிகளில் பயிர்கள் அழிந்துவிடவில்லை யாதலின், அங்கே கடன் நிலுவைகள் வசூலிப்பினை ஒத்திப்போடுவதற்கான தேவையில்லை.

5. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பொது விவாதம்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். சார், இந்த சபையிலுள்ள முக்கியமான எதிர்கட்சிகளில் சுதந்திராக் கட்சியும் ஒன்று என்று எல்லோருக்கும் தெரியும். எங்களுடைய கட்சியின் சார்பில் நான் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் சொல்லிவருகிறேன். எதிர்க்கட்சி வரிசையிலுள்ள எங்கள் தலைவர்கள் ஒருவரும் இந்த பட்ஜெட்டில் பேசவில்லை. முக்கியமாக, டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த சபையிலே முக்கியமான உறுப்பினர் என்று தெரிந்திருந்தும் அவருக்கு ஆறு நிமிஷம் என்று சொல்கிறீர்களே இது நியாயம்தானா? இப்படி கூட 4, 5 நிமிஷங்கள் கூடக் கொடுத்தால் என்ன குடி முழுகி போய்விடும் என்று கேட்கிறேன். மேலும் இப்படி நீங்கள் நடந்துகொண்டால், இனி பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே கலந்துகொள்ளமாட்டோம் என்றும் திட்டவட்டமாக தெரிவித்துக்கொள்கிறேன். பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே நாங்கள் வந்து கலந்துகொள்ள மாட்டோம். You are so rigid, Sir. Excuse me.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் 'ரிஜி'-டாக இல்லை. எதிர் கட்சிகளுக்கு எத்தனை மணி நேரம் உண்டோ, அதோடு 50 சதவீதம் அதாவது பாதி நேரம், கூடுதலாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது, போனஸ் மாதிரி. போனஸ் சேர்த்த பின்னர் இந்த நேரம் உங்கள் கட்சிக்குக் கிடைத்திருக்கிறது. அதற்கு மேலே இன்னும் ஒரு நிமிடம், இரண்டு நிமிடம் அதிகம் கேட்டால்கூட, யாரும் அதைப்பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். அதற்காக நீங்கள் போலவையிலே இவ்வளவு பொறுமையிழந்துவிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் திரு ஆதிமூலம் அவர்கள் குறிப்பிட்டபடி ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நேரத்தில் சுதந்திராக் கட்சிக்கு 6 நிமிடங்கள் இன்னும் பாக்கியிருக்கிறது—அதற்குள் தாங்கள் முடித்துக்கொள்வதற்கு முயற்சி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* DR. H. V. HANDE.—Mr. Speaker, Sir, to-day is a very auspicious day as far as the D.M.K. Party is concerned because it is exactly one year since they took over the reins of the administration. Now we are happy to see that our Hon. Chief Minister is amidst us and he will be able to reply to the debate on the budget. The Budget has disappointed many persons who thought that this Government will collapse. In this connection, I wish to point out specifically one instance. Our erstwhile Finance Minister of the Government of India and also a great business magnate, Mr. T.T. Krishnamachari had made a statement that this Government would have to levy a tax to the tune of nearly Rs. 20 crores more than that tax levied last year. I had read that statement on the day of the presentation of the Budget. I also took that statement very seriously because it came from a distinguished person. Now I am extremely happy to find that this Budget has completely belied their expectations.

Now I shall briefly refer to some points and leave them without properly expatiating on them. Firstly, frequent interference from the Treasury Bench can definitely be avoided with consider-